| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 82/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சீதாராமையர் | நாள் | 22.11.2021 |
| தகப்பனார் பெயர் | சஞ்சீவி அய்யர் (எ) அன்னு அய்யார் | | |

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் செய்துகொண்டுள்ள பூஜையை தடுத்ததாலும், எங்களுக்கு ஒரு வருடம் உள்ள பூஜை உரிமையை தடுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வருடத்திற்கு ஒரு முறை ஒரு வருடம் உள்ளதா அல்லது 3 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு வருடம் உள்ளதா என்றால் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு வருடம் உள்ளது. தமிழ் வருடம் மன்மத வருடம் என்பது முடிந்துவிட்டதா என்றால் முடிந்துவிட்டது. முதல் பரிகாரம் முடிந்துவிட்ட பரிகாரம் என்றால் ஆமாம். மொத்தம் 6 கோயில்கள் சுழற்சி முறையில் வரும் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கோவில்கள் முறை தான் சுழற்சி முறையில் வரும் என்றால் ஆமாம். அது பி.வா.சா.ஆ.1. மொத்தம் 6 குடும்பங்கள் உள்ளது எனவும், 6 குடும்பங்கள் தான் சுழற்சிமுறையில் செய்து வருகிறது என்றால் ஆரம்பத்தில் 6 குடும்பங்கள் இருந்தது. தற்போது 3 குடும்பங்கள் தான் செயல்பட்டு வருகிறது. எந்த வருடம் 6 குடும்பங்கள் என்பது 3 குடும்பங்களாக மாறியது என்றால் நந்தன வருடத்தில் மாறியது. வழக்குரை மற்றும் சத்தியப்பிரமாண வாக்குமூலத்திலும் 6 குடும்பங்கள் என்பது 3 குடும்பங்களாக மாறியது என கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 3 குடும்பங்களாக மாறியதற்கு எழுத்துப்பூர்வமாக எழுதியுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1ல் உள்ள கோவில்கள் அனைத்தும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சென்றாய பெருமாள் கோவில், சஞ்சீவிராயர் ஆஞ்சநேயர் கோவில் ஆகியவை கட்டுப்பாட்டில் இல்லை. மீதியுள்ள 4 கோவில்களில் பூஜை முறைகள் குறித்து எவ்வித மாறுதல் செய்தாலும் அரசாங்கத்திற்கு கூறிவிட்டு அனுமதியின் பேரில் தான் மாறுதல்கள் செய்யமுடியும் என்றால் ஆமாம். 6 குடும்பங்கள் என்பது 3 குடும்பங்களாக மாறியதாக கூறுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுள்ளோமா என்றர்ல பெறவில்லை. எதிர்வழக்குரையை காண்பித்து எதிர்வழக்குரையில் கூறியுள்ள 6 குடும்பங்களில் உள்ள ஒவ்வொரு பெயரையும் குறிப்பிட்டு அதன் வம்சாவளி பட்டியல்

சரியா என கேட்டதற்கு சரிதான் என சாட்சி சாட்சியம் அளிக்கிறார். அந்த 6 குடும்பங்களுக்கு தான் உரிமையா என்றால் முன்பு இருந்தது. தற்போது 3 குடும்பங்கள் தான். எதிர்வழக்குரையில் 4ம் பக்கத்திற்கு அடுத்த பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 6 குடும்பங்கள் மற்றும் பூஜை முறைகள் குறித்து படித்து காண்பிக்கப்பட்டு சரியா என வினவியதற்கு சரிதான் என சாட்சி சாட்சியம் அளிக்கிறார். தற்போது ஒரே ஒரு கோவில் வேட்ராயர் கோவிலுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தற்போதுவரை வழக்கு கோவில் இந்து சமயஅறநிலையத்துறையினர் கட்டுப்பாட்டின் கீழ் தான் உள்ளது என்றால் ஆமாம். இந்து சமயஅறநிலையத்துறையினருக்கு எதிராக பரிகாரம் வேண்டாம் என கூறிவிட்டேன் என்றால் ஆமாம். இந்து சமயஅறநிலையத்துறையினருக்கு எதிராக பரிகாரம் கோராததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. வழக்கு கோவிலுக்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் 54 ஏக்கர் உள்ளது. 54 ஏக்கரை யார் யார் பிரித்து ஓட்டிவருகிறார்கள் என்பதற்கு இவ்வழக்கில் ஆவணங்களை தாக்கல்செய்யவில்லை என்றால் ஆமாம். அந்த 54 ஏக்கரும் 6 குடும்பங்களுக்கும் பாத்தியப்பட்டது என்றால் அவரவர் சொத்துக்களுக்கு அவரவர்களுக்கு உரிமை உண்டு. ஆதியில் இருந்தே உள்ளது என்றால் ஆமாம். நான் சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் 3 குடும்பங்கள் தான் பூஜை செய்து வருகின்றனர் என கூறியுள்ளது தவறு எனவும், 6 குடும்பங்கள் தான் 6 கோவில்களில் சுழற்சி முறையில் பூஜை செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. எங்களுக்கும், இந்து சமயஅறநிலையத்துறையினருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதில் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது எனவும், பூஜை செய்யக்கூடாது என கூறினார்கள் எனவும், தற்போது நான் பூஜை செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அவர்கள் உண்மையை கூறிவிடுவார்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக பரிகாரம் கோரவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கண்ணையரை எதற்கு இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவரும் பூஜைக்கு இடையூறு செய்தார். அதனால் சேர்த்துள்ளேன். தற்போது அவருக்கு எதிராக பரிகாரம் வேண்டாம் என கூறிவிட்டோம் என்றால் ஆமாம். எங்களுடைய குடும்பத்திற்கு 6 மாதத்திற்கு 5 நாட்கள் தான் பூஜைமுறை உள்ளது எனவும், வருடத்திற்கு 10 நாட்கள் தான் உரிமை உள்ளது என்றால் இல்லை. கிருஷ்ணய்யரின் வாரிசுகளை இவ்வழக்கில்

சேர்க்கவில்லை என்றால் அவர்கள் தூரத்தில் உள்ளதால் சேர்க்கவில்லை. 6 குடும்பமும் தேவையான தரப்பினர்கள் எனவும், அவர்களை சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு சுழற்சி முறையில் பூஜை செய்யும் உரிமை உள்ளது என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகள் லட்சுமண அய்யர் வகையறாவில் வருகிறார்கள். லட்சுமண அய்யர் வகையறா பூஜை உரிமை இல்லாமல் இன்னும் 2 கரை ஆக மொத்தம் 3 கரைகளில் பூஜை உரிமை உள்ளது என்றால் ஆமாம். ஒரு வருடம் பூஜை செய்து கொள்கின்றனர். கிருஷ்ண அய்யர் கரையில் 1, 2 பிரதிவாதிகள் வருகின்றனரா என்றால் இல்லை. எங்களுடைய தாத்தா கிருஷ்ண அய்யர். என்னுடைய தாத்தா கிருஷ்ண அய்யருக்கு மற்ற வாரிசுகள் உள்ளனரா என்றால் ஆமாம். என்னுடைய சித்தப்பாவிற்கும், எங்களுக்கும் பிரச்சினை இல்லை. கிருஷ்ண அய்யரின் மற்ற வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் தூரத்தில் உள்ளனர். ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் பூஜை உரிமை உள்ளது என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. அ.வ.எண்.19/2011 வழக்கில் என்ன தீர்ப்பானது என்பது எனக்கு தெரியுமா என்றால் எங்களிடம் 1, 2 பிரதிவாதிகள் அவர்களுடைய உரிமையை அடமானம் வைத்திருந்தனர். பணம் கொடுக்கும்வரை நாங்கள் பூஜை செய்து கொள்ளலாம் என தீர்ப்பானது. அதில் 1, 2 பிரதிவாதிகள் ஆஜராகாததால் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் ஆமாம். ஒருதலைபட்ச தீர்ப்பிற்கு பின்னிட்டு 1வது வாதி 1, 2 பிரதிவாதிகளிடம் ரூ.30000/– பெற்றுக்கொண்டு அ.வ.எண்.19/2011 தீர்ப்பினை வாபஸ் பெற்றுக்கொள்வதாக பஞ்சாயத்தார் முன்னிலையில் 24.04.2012ல் ஒரு ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் ஆமாம். ஆனால் ரூ.10000/– மட்டும் தான் கொடுத்தார்.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.